நாள் 11.10.2023 O.S 26 of 2019 வா.சா.1 நாகம்மாள்

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வா.சா.ஆ1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்து வீடு என்றால் சரிதான். ரூ.2,50,000/-ம் தொகைக்குரிய வட்டிக்குஈடாக வழக்கு சொத்தில் குடியிருந்துஅனுபவம் செய்துகொள்ள வேண்டும் என்றும், வாய்தா முடிவடையும் காலத்தில் மேற்படி தொகை திரும்ப பெற தக்கது என வா.சா.ஆ1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அந்த தொகையைதிரும்ப கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வீட்டின் சாவி என்னிடம் உள்ளது என்றால் சரிதான். சாவியை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ1 ஆவணம் பதிவுசெய்யாத ஆவணம் என்றால் சரிதான். வா.,சா.ஆ1 ஆவணம் அனுபோக அடமான ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ1 ஆவணத்திற்கு 7% முத்திரை கட்டணமும் 1% பதிவு கட்டணமும் வசூலிக்கதக்கது என்றாலும் அதை முறையாக செலுத்தாமல் இந்தஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 ஆவணத்திற்கு முறையாக முத்திரை கட்டணம் செலுத்தாமல் அந்த ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ள நிலையில் அதற்கு ரூ.1,75,000/-த் தண்டத்தொகையாக செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. மேற்படி முத்திரை கட்டணத்தைமுறையாக செலுத்தாமல் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வாச.சா.ஆ1 பதிவுசெய்யாத ஆவணம் என்பதால் அந்த ஆவணத்தின் அடிப்படையில் நான் கோரியுள்ள தீர்வும் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் மேற்படி வீட்டில் வசித்து வந்து வட்டி கேட்டுள்ளது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரத்தை சட்டப்படி பெற தகுதியுடையவர் அல்ல என்றால்சரியல்ல.